**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 177 / 2022**

**2026ம் வருடம் ஜனவரி மாதம் 22 ம் நாள் வியாழக்கிழமை**

**பி.வா.சா.2** சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி இளநிலை உதவியாளர் திரு. ராமகிருஷ்ணன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாக்கியம் | த/பெ | **பெரிய கருப்பன்** |
| ஊர் | | வட்டம் | |
| சாதி | | சமயம் | |
| வயது | | தொழில் | |

**முதல் விசாரணை:–**

நான் இந்த வழக்கின் பிரதிவாதிகள் தரப்பு 2வது சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது.

எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை :–**

எனக்கு சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் வரவில்லை. பிரதிவாதிகள் எனது தூரத்து உறவினர்கள், பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் சாட்சியமளிக்க வந்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். என்ன பரிகாரம் கோரிகள் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. எந்த தேதியில் வாதிகள் பிரதிவாதிகளின் வயலுக்கு செல்லக்கூடிய வாய்க்காலை அழித்தார்கள், எந்த தேதியில் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது, காந்தியும் முனிச்சாமியும் காவல் நிலையத்தில் புகார்

கொடுத்தார்கள். வாய்க்காலை அழித்ததாக சொல்வது பொய் அவ்வாறு ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் 2013ம் ஆண்டு வழக்கு எண் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கு யார் யாருக்கு இடையே நடந்தது என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதி பிரதிவாதிகளுக்கிடையான அசல் தாவா என்னவென்றே எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் எனது உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை